அறிவித்தல்

சப்ரகமுவ மாகாணக் கல்வி, தகவல் தொழிநுட்ப மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சபைப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக கல்வியியல் இளமானிப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 2 இலுள்ள தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரல் – 2026/2027

சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சபைப் பாடசாலைகளில் நிலவும், அட்டவணை இலக்கம் I இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடப் பரப்புக்களுக்கு (ஆரம்ப நிலை மற்றும் க.பொ.த. (சாதாரண தரம்) பாடங்களுக்காக) உரிய வகையில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக அப/26/1789/806/094 ஆம் இலக்க மற்றும் 2026.09.28 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களின் DMS/CAD/SG ஆம் இலக்க மற்றும் 2026.10.26 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற அனுமதியின் பிரகாரம், அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 2507/02 மற்றும் 2026.09.21 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதிய இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 05 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய மற்றும் கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/02/29/29/01/01 ஆம் இலக்க மற்றும் 2026.10.20 ஆம் திகதிய கடித்தத்தின் ஆலோசனைகளின் பிரகாரம் மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் அவர்களின் செயலாளரின் GS/ES/7/6/2 ஆம் இலக்க மற்றும் 2026.11.06 ஆம் திகதிய கடிதங்களின் மூலம் கிடைக்கப்பெற்ற அனுமதியின் பிரகாரம், **திறந்த அடிப்படையில்** இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள சப்ரகமுவ மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் கல்வியியல் இளமானிப் பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1). பொதுவான தகைமைகள் :-

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.

ii. சிறந்த நடத்தையுடைய மற்றும் போதிய உள மற்றும் உடல் ஆரோக்கியத்தினைக் கொண்ட ஒருவராக இருத்தல் வேண்டும்.

iii. தகைமைகள் கவனத்தில் எடுக்கப்படும் திகதியன்று அதாவது 2026.11.09 ஆம் தினத்தன்று உடன் முன்னரான 03 வருட காலம் சப்ரகமுவ மாகாணத்தில் நிரந்தரக் குடியிருப்பாளர் ஒருவராக இருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின் போது உடன் முன்னரான 03 வருட காலத்திற்கு உரிய நிரந்தர வதிவினை, கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் அல்லது உரிய ஏனைய ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.) அவ்வாறே, தகைமைகள் கவனத்தில் எடுக்கப்படும் தினத்திற்கு முன்னர் திருமணமாகி வேறு ஒரு மாகாணத்தில் இருந்து இந்த மாகாணத்திற்கு வருகை தந்துள்ள விண்ணப்பதாரிகள் இருப்பின், அவர்கள் தமது திருமணச் சான்றிதழ் மற்றும் வாழ்க்கைத்துணையின் நிரந்தர வதிவிடச் சான்றிதழ் என்பவற்றின் மூலம் உடன் முன்னரான 03 வருட காலத்திற்கான வதிவினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

iv. 2026.11.09 ஆம் திகதியன்று வயது 18 வருடங்கள் பூத்தியாகி இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்திகதியன்று வயது 40 வருடங்களைத் தாண்டி இருத்தல் கூடாது.

v. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கவனத்தில் எடுக்கப்படும் தினத்தன்று பதவிக்கு இணைத்துக் கொள்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

vi. சப்ரகமுவ மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும்.

2). **<u>கல்வித் தகைமைகள் :-</u>**

i. அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 2507/02 மற்றும் 2026.09.21 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதிய இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 05 ஆவது திருத்தத்தின் 13.8 ஆம் ஏற்பாடுகளுக்கு அமைய 2026.11.09 ஆம் திகதியன்று பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு உள்ள அல்லது ஏனைய விசேட பாராளுமன்றச் சட்டங்களின் ஊடாக தாபிக்கப்பட்டு உள்ள பட்டங்களை வழங்கும் நிறுவனங்கள்/ பல்கலைக்கழகங்களின் ஊடாக வழங்கப்பட்டு உள்ள கல்வியியல் இளமானிப் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன், மேற்படி கல்வியியல் இளமானிப் பட்டம் 04 வருட காலம் முழுநேர அடிப்படையிலான (நிகழ்நிலை அல்லாத) பட்டதாரிப் பாடநெறி ஒன்றாக இருத்தல் குறைந்தபட்சம் 120 பாட அலகுகளைப் (120 Credits) பூர்த்தி செய்திருத்தல், அரசாங்க தேசிய அல்லது மாகாணப் பாடசாலை ஒன்றில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலை ஒன்றில் குறைந்தபட்சம் 10 வாரங்கள் செயன்முறைக் கற்பித்தல் பயிற்சியினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் மேற்படி பயிற்சியினை தகைமையுள்ள மேற்பார்வை ஒன்றின் / மேற்பார்வை சபை ஒன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டு இருத்தல் மற்றும் பட்டப் பாடநெறியில் குறைந்தபட்சம் 06 பாட அலகுகளையேனும் பூர்த்தி செய்யும் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றினை / அறிக்கை ஒன்றினை பூர்த்தி செய்திருத்தல் ஆகிய அளவுகோல்களை உள்ளடக்கி இருத்தல்.

ii. மேற்படி பட்டப்படிப்பிற்காக கற்றுள்ள தேர்ச்சி பெற்றுள்ள / பாடத்திற்கு / பாடங்களுக்கு ஒத்தியங்கும் வகையில் வெற்றிடம் நிலவும் பாடங்களுக்காக இந்த அறிவித்தலின் அட்டவணை இலக்கம் I இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

iii. கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் (பொது ஆங்கிலம் மற்றும் பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்து இருத்தல்.

iv. கல்விப் பொதுத் தாரதர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் தாய்மொழி மற்றும் கணிதம் என்பவற்றில் சித்தியடைந்து, 03 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.

முக்கிய குறிப்பு :- விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

- தனது பட்டத்திற்கு அமைய விண்ணப்பிக்க இயலுமான பாடம் / பாடங்கள் மற்றும் மொழி மூலம் தொடர்பில் விண்ணப்பதாரிகள் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- அதன் போது தேர்ச்சி பெற்ற பாடம் / பாடங்கள் மற்றும் மொழி மூலத்திற்கு அமைய மாத்திரம் உரிய ஆசிரியர் வெற்றிடங்களுக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.
- உயர்ந்தபட்சம் இரண்டு (02) பாடங்களுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
- நியமனங்களைப் பெற்றுக் கொள்வதற்கான விருப்பத்தின் முன்னுரிமை அடிப்படையில் பாடம் / பாடங்களுக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.
- நீங்கள் விண்ணப்பித்த பாடம்,மொழி மூலம் மற்றும் முன்னுரிமையினை எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.
- நியமனங்களை வழங்கும் போது நீங்கள் விண்ணப்பித்துள்ள விருப்பத்தின் முன்னுரிமை மற்றும் சப்ரகமுவ மாகாணத்தின் ஆசிரியர் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதன் முன்னுரிமை என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.
- 04 வருட கால முழுநேர (நிகழ்நிலை அல்லாத) பட்டப் பாடநெறி ஒன்றினையும், பட்டப் பாடநெறியில் குறைந்தபட்சம் 120 பாட அலகுகளைப் (120 Credits) பூர்த்தி செய்துள்ளமை தொடர்பிலும் மற்றும் பட்டப் பாடநெறியில் குறைந்தபட்சம் 06 பாட அலகுகளையேனும் பூர்த்தி செய்யும் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றினை/ அறிக்கை ஒன்றினை பூர்த்தி செய்துள்ளமை தொடர்பிலும் பல்கலைக்கழகத்தின்

மூலம் உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றினை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைத்தல் கட்டாயமானதாகும்.

- ❖ அரசாங்க தேசிய அல்லது மாகாணப் பாடசாலை ஒன்றில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலை ஒன்றில் குறைந்தபட்சம் 10 வாரங்கள் செயன்முறைக் கற்பித்தல் பயிற்சியினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் மேற்படி பயிற்சியினை தகைமையுள்ள மேற்பார்வை ஒன்றின் / மேற்பார்வை சபை ஒன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டு இருத்தல் என்பன தொடர்பாக உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றினை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைத்தல் கட்டாயமானதாகும்.
- ❖ இது தொடர்பில் தோன்றும் பிரச்சினைகள் மற்றும் ஆசிரியர் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதன் முன்னுரிமை ஆகியன தொடர்பான இறுதித் தீர்மானம் சப்ரகமுவ மாகாணக் கல்வி, தகவல் தொழிநுட்ப மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சுச் செயலாளருக்கு உரித்தானதாகும்.

3). <u>ஆட்சேர்ப்பு முறை :-</u>

3:1. அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதிய இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.3.5 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 2507/02 மற்றும் 2026.09.21 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதிய இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 05 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

3.2 தகைமை பெற்றவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றும் மற்றும் செயன்முறைப் பரீட்சை ஒன்றும் நடாத்தப்படும்.

3:3. <u>பொதுவான நேர்முகப் பரீட்சை :-</u> ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டு உள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளனவா எனப் பரீட்சித்தல் மற்றும் உடல் மற்றும் உளத் தகைமையினைப் பரீட்சித்தல் என்பவற்றிற்காக நடாத்தப்படும். பொதுவான நேர்முகப் பரீட்சையின் போது புள்ளி வழங்கப்படுதல் மேற்கொள்ளப்படமாட்டாது.

3:4. <u>செயன்முறைப் பரீட்சை :-</u> ஆசிரியர் தொழிற்துறையில் முக்கியம் பெறும் கற்றல் கற்பித்தல் செயன்முறை தொடர்பாக விண்ணப்பதாரிக்கு உள்ள திறமையினை அளவிட்டுப் பார்த்தல் இதன்போது மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரர்களினால் நியமனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் பாடத்திற்கு உரிய வகையில் அடையாளம் காணப்பட்ட தலைப்பு ஒன்றின் கீழ் 05 நிமிடங்களுக்குக் குறையாத முன்வைத்தல் ஒன்றினை செயன்முறைப் பரீட்சை வேளையில் முன்வைத்தல் வேண்டும். செயன்முறைப் பரீட்சையின் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின் ஊடாக புள்ளிகள் வழங்கப்படும்.

தொடர் இல.	**செயன்முறைப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் அளவுகோல்கள்**	**அதிகூடிய புள்ளிகளின் எண்ணிக்கை**	**சித்தியடைவதற்கு அவசியமான ஆகக் குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை**
1.	நோக்கம் மற்றும் அதற்கான பிரவேசம்	05	02
2.	ஆளுமை மற்றும் குரலினைக் கட்டுப்படுத்தல்.	05	02
3.	தொடர்பாடலின் தெளிவான தன்மை.	05	02
4.	நேர முகாமைத்துவம்.	05	02
5.	முன்வைத்தலின் போது நுட்பமுறைகளைப் பயன்படுத்தல்.	05	02
	மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை	25	10

3:5. அதற்கு அமைய, சப்ரகமுவ மாகாணத்தின் மாகாணப் பாடசாலைகளில் நிலவும், இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டு உள்ள அட்டவணை இலக்கம் I இல் குறிப்பிடப்பட்டு உள்ள வெற்றிடம் நிலவும் பாடங்களுக்காக மாத்திரம் இந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

3:6. நியமனங்களை வழங்குதல் மேற்கொள்ளப்படுவது நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு உரிய வகையில் செயன்முறைப் பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமைக்கு அமைவாக ஆகும் என்பதுடன், நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றுதல் நியமனம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமை ஒன்றாகக் கருதப்படமாட்டாது.

3:7. நேர்முகப் பரீட்சைக்காக உரிய தினத்தில் பங்குபற்றாத விண்ணப்பதாரிகள் தொடர்பில் எந்தவொரு வகையிலும் மீண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது. அவ்வாறே நேர்முகப் பரீட்சைத் தினத்தில் சகல சான்றிதழ்களையும் முன்வைத்தல் வேண்டும் என்பதுடன், பின்னர் முன்வைக்கப்படும் எந்தவொரு சான்றிதழும் பொறுப்பேற்கப்படமாட்டாது.

4). <u>சேவை நிபந்தனைகள் :-</u>

4:1. அரச / மாகாண அரச சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டு உள்ள நிபந்தனைகளுக்கும், மேற்படி பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்டு உள்ள அல்லது இதனகத்துப் பின்னர் மேற்கொள்ளப்பட உள்ள திருத்தங்களுக்கும் உட்பட்ட வகையில் தெரிவு செய்யப்படும் கல்வியியல் இளமானிப் பட்டதாரிகள் சப்ரகமுவ மாகாண அரச சேவையில் இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 2 இலுள்ள தரம் II இற்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

4:2. இந்த நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. மேலும், நீங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பினை வழங்குதல் வேண்டும். அரசினால் அவ்வப்போது குறித்துரைக்கப்படும் வகையில் நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும்.

4:3. இந்தப் பதவிக்காக நியமனம் செய்யப்படுவது 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்ட வகையில் ஆகும்.

4:4. அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதிய இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.3.5 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 2507/02 மற்றும் 2026.09.21 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதிய இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 05 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுடன், பதவியுயர்வுகள் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். அவ்வாறே இந்த அறிவித்தலின் மூலம் தழுவல் செய்யப்படாத ஏதேனும் விடயம் ஒன்றிருப்பின் குறித்த சந்தர்ப்பங்கள் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டு உள்ள ஏற்பாடுகளுக்குக் கட்டுப்படும்.

4:5. நியமனம் பெறும் ஒவ்வொருவரும் 2020.10.16 ஆம் திகதிய மற்றும் 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமையவும் மற்றும் அதில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு அமையவும் இரண்டாவது அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4:6. இந்த ஆட்சேர்ப்பு பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதன் காரணமாக ஒவ்வொருவரும் ஆரம்ப நியமனத்தினைப் பெறும் பாடசாலையில் குறைந்தபட்சம் தொடர்ச்சியாக 05 வருடங்கள் கட்டாயமாகப் பணிபுரிதல் வேண்டும் என்பதுடன், மேற்படி காலப்பகுதியில் இடமாற்றம் பெறுவதற்கான உரித்து காணப்படுவதில்லை.

5). **<u>சம்பள அளவுத்திட்டம் :-</u>**

இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 2025.03.25 ஆம் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றுநிருப இலக்கம் 10/2025 இற்கு அமையவாகும் என்பதுடன், இந்த நியமனத்திற்கு உரித்தான சம்பளத் திட்டம் ஜீஈ-2-2025 ஆம் இலக்க சம்பள வகையின் கீழ் மாதாந்தம் **ரூ.66,880-10x1490-7x2400-20x2940-ரூ.157,380/=** தொகை ஆகும். கல்வியியல் இளமானிப் பட்டதாரிகள் இந்த சம்பள அளவுத்திட்டத்தின் 3 ஆவது படிமுறை ஆகிய ரூ. 69,860/- மதாந்த சம்பளத்தில் வைக்கப்படுவர். இதற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசினால் அவ்வப்போது செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

6). **<u>விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்வதற்கான ஆலோசனைகள் :-</u>**

6:1. விண்ணப்பங்கள் நிகழ்நிலை முறையின் ஊடாக கோரப்படும்.

6:2. சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் www.moe.sg.gov.lk எனும் எமது உத்தியோகபூர்வ வலைத்தளத்திற்குள் பிரவேசித்து இந்த விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலைப் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

6:3. சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் உரிய தகவல்களை உள்ளடக்கி விண்ணப்பத்தினை நிகழ்நிலை முறையின் ஊடாக பூர்த்தி செய்தல் வேண்டும்.

6:4. ஒரு விண்ணப்பதாரி தேர்ச்சி பெற்ற பாடம் / பாடங்கள் மற்றும் மொழி மூலத்திற்கு அமைய உயர்ந்தபட்சம் இரண்டு (02) பாடங்களுக்காக மாத்திரம் விண்ணப்பிக்கும் ஆற்றல் உள்ளது.

6:5. விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது அட்டவணை இலக்கம் I இனைப் பயன்படுத்தவும்.

6:6. விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது விசேட எழுத்துக்களைப் (Special Characters) இடுதல் கூடாது.

6:7. பூர்த்தி செய்யப்பட்ட தகவல்கள் சரியாகவும் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமையவும் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளனவா என்பதனை விண்ணப்பத்தினை அனுப்பி வைப்பதற்கு (Submit) முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். பின்னர் எந்தவொரு வகையிலும் நீங்கள் உள்ளடக்கிய தகவல்களை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

6:8. விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதி ஒன்றினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தம் ஒன்றாக கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

6:9. முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

7). **<u>விண்ணப்பிக்கும் முறை :-</u>**

7:1. சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் www.moe.sg.gov.lk எனும் எமது உத்தியோகபூர்வ வலைத்தளத்திற்குள் பிரவேசித்து "ஆட்சேர்ப்புக்கள் மற்றும் இடமாற்றங்கள்" இன் கீழ் உள்ள "மாகாண அரச சேவை" ஊடாக **"சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சபைப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக கல்வியியல் இளமானிப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 2 இலுள்ள தரம் II இற்கு இணைத்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரல் – 2026/2027"** இன் கீழ் பிரசுரிக்கப்பட்டு உள்ள அறிவித்தலினை வாசித்து விண்ணப்பத்தினை நிகழ்நிலை முறையில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

7:2. விண்ணப்பத்தினை நிகழ்நிலை முறையில் அனுப்பி வைத்ததன் பின்னர் அதனைப் பதிவிறக்கம் செய்து அச்சுப் பிரதியில் இலக்கம் 08, 09 ஆம் பகுதிகளைக் கையெழுத்தினால் பூர்த்தி செய்து விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தி, விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் **"செயலாளர், கல்வி, தகவல் தொழிநுட்ப மற்றும்**

கலாச்சார அலுவல்கள் அமைச்சு, சப்ரகமுவ மாகாண சபை, நவ நகரம், இரத்தினபுரி" எனும் முகவரிக்குக் கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தினை உள்ளிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சபைப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக கல்வியியல் இளமானிப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 2 இலுள்ள தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரல் – 2026/2027"** என கட்டாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் எந்தவொரு சான்றிதழ்களையும் இணைத்து அனுப்புதல் கூடாது.

7:3. விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், அரச பாடசாலை ஒன்றின் அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளர் / சட்டதரணி / பிரபல நொத்தாரிஸ் / முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் / அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிநிலைத் தரம் ஒன்றிலுள்ள பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

7:4. ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தினை மாத்திரமே முன்வைக்க முடியும். விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் விண்ணப்பதாரிகளுக்கு அறியத் தரப்படமாட்டாது. விண்ணப்பித்த பாடம்/ பாடங்கள் பின்னர் எந்தவொரு வகையிலும் மாற்றம் செய்யப்படமாட்டாது என்பதுடன், அது தொடர்பில் முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது. மேலும், பட்டப்படிப்பிற்காகக் கற்றுள்ள தேர்ச்சி பெற்ற பாடம் / பாடங்களின் கீழ் அட்டவணை இலக்கம் I இல் குறிப்பிடப்பட்டு உள்ள தகைமைகளுக்கு அமைவாக மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், நியமனம் செய்யப்படும் பாடசாலை அல்லது நிமயனப் பாடம் எந்தவொரு காரணத்திற்காகவும் மாற்றம் செய்யப்படமாட்டாது.

7:5. நிகழ்நிலை விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல் **2026 நவெம்பர் மாதம் 09 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு திறந்து வைக்கப்படுவதுடன் 2026 டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி பி.ப. 09.00 மணிக்கு** பூர்த்தி அடையும். விண்ணப்பங்கள் நிகழ்நிலை முறையில் அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் அதனைப் பதிவிறக்கம் செய்து, அச்சுப் பிரதியில் இலக்கம் 08, 09 ஆம் பகுதிகளைக் கையெழுத்தினால் பூர்த்தி செய்து விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் **2026.12.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கப்பெறும் வகையில் மேலே இலக்கம் 7:2 இல் குறிப்பிடப்பட்டு உள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

7:6. விண்ணப்பப்படிவம் தபாலில் தொலைந்து போனமை தொடர்பாக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது. இறுதித் திகதி வரை தாமதித்தல் காரணமாக ஏற்படக் கூடிய நட்டத்தினை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்றல் வேண்டும்.

08). வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்து உள்ளனர் எனும் முன்கூட்டிய தீர்மானத்தின் கீழ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தல் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டமையாக கருதப்படுதல் கூடாது.

09). எவரேனும் விண்ணப்பதாரி ஒருவர் தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பது தொடர்பில் நியமனத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் வெளிக்கொண்டு வரப்பட்டால் அவரின் விண்ணப்பம் எந்தவொரு காரணமும் அறிவிக்காமல் நிராகரிக்கப்படும். மேலும் உரிய தகைமைகள் தொடர்பாக அறிந்தே அல்லது வேண்டுமென்றே பொய்யான தகவல்களை முன்வைத்துள்ளமை தொடர்பில் அல்லது சரியான தகவல்களை மறைத்து வைத்துள்ளமை தொடர்பில் நியமனம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அறிய வருமிடத்து அல்லது நியமனத்திற்காக பொருத்தமற்றவர் என

வெளிக்கொண்டு வரப்பட்டால், உடனடியாக அரச சேவையில் இருந்து நீக்குதல் / சேவை முடிவுருத்தல் மேற்கொள்ளப்படும்.

10). அட்டவணை இலக்கம் I இல் குறிப்பிடப்பட்டு உள்ள பாடப் பரப்பிற்கு உரிய வகையில் மாத்திரம் இந்த அறிவித்தலின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு உள்ளதுடன், ஆதலால் இந்த அறிவித்தலுக்கு உரிய வகையில் விண்ணப்பம் ஒன்றினை முன்வைத்தல், நேர்முகப் பரீட்சைக்காக அழைத்தல் அல்லது அதற்காகத் தோன்றுதல் ஆகிய எந்தவொரு விடயமும் அல்லது வேறு எந்தவொரு விடயமும் சப்ரகமுவ மாகாண அரச சேவையின் இலங்கை ஆசிரியர் சேவையில் நியமனம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை ஒன்றோ அல்லது சட்ட ரீதியான உரித்து ஒன்றோ அல்ல.

11). இந்த அறிவித்தலின் மூலம் தழுவல் செய்யப்படாத ஏதேனும் ஒரு விடயம் இருப்பின் அது தொடர்பில் தீர்மானம் ஒன்றினை மேற்கொள்ளும் உரிமையும் வெற்றிடங்களுள் ஒரு பகுதியினை அல்லது அனைத்தையும் பூர்த்தி செய்யாமல் இருத்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் உரிமையும் சப்ரகமுவ மாகாணக் கல்வி, தகவல் தொழிநுட்ப மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சுச் செயலாளருக்கு உரித்தானதாகும். அவ்வாறே, இந்த ஆட்சேர்ப்பினைப் பிற்போடுதல், இரத்து செய்தல் அல்லது நடாத்தப்பட்டதன் பின்னர் தெரிவு செய்தல் / தெரிவு செய்யாமல் இருத்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் உரிமையும் சப்ரகமுவ மாகாணக் கல்வி, தகவல் தொழிநுட்ப மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சுச் செயலாளருக்கு உரித்தானதாகும்.

12). சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழிகளிலான உரைகளுக்கு இடையில் ஏதேனும் ஒவ்வாத தன்மை ஒன்று காணப்பட்டால் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தல் சரியானதாகக் கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஜீ.டீ. லக்மலீ யூ. குமாரி
செயலாளர்,
கல்வி, தகவல் தொழிநுட்ப மற்றும்
கலாச்சார அலுவல்கள் அமைச்சு
சம்பரகமுவ மாகாணம்.

2026.11.09 ஆம் திகதி,
சப்ரகமுவ மாகாண சபையின்,
கல்வி, தகவல் தொழிநுட்ப மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சில்.

அட்டவணை இலக்கம் I

வெற்றிடம் நிலவும் பாடம்	கல்வித் தகைமைகள்	வெற்றிடம் நிலவும் மொழி மூலம் மற்றும் பாடத்திற்கான குறியீட்டு இலக்கம்		
		சிங்கள மொழி மூலம்	தமிழ் மொழி மூலம்	ஆங்கில மொழி மூலம்
ஆரம்பக் கல்வி	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தாய்மொழியினை பிரதான பாடமாக / பாடங்களாகக் கற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**10S**	**10T**	
விஞ்ஞானம்	உரிய பாடத்தினை க.பொ.த. (உயர் தரம்) பாடம் ஒன்றாக / பாடப் பிரிவாகக் கற்று அதில் சித்தியடைந்து இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**11S**	**11T**	
கணிதம்	உரிய பாடத்தினை க.பொ.த. (உயர் தரம்) பாடம் ஒன்றாக / பாடப் பிரிவாகக் கற்று அதில் சித்தியடைந்து இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**12S**		
சிங்கள மொழியும் இலக்கியமும்	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**13S**		
தமிழ் மொழியும் இலக்கியமும்	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.		**14T**	
ஆங்கில மொழி	உரிய பாடத்தினை க.பொ.த. (உயர் தரம்) பாடம் ஒன்றாகக் கற்று அதில் சித்தியடைந்து இருத்தல் அல்லது உயர் தரத்தில் பொது ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி ஒன்றினை அல்லது அதிலும் கூடிய சித்தி ஒன்றுடன் சித்தியடைந்து இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**15S**		
வரலாறு	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**16S**	**16T**	

அட்டவணை இலக்கம் I

வெற்றிடம் நிலவும் பாடம்	கல்வித் தகைமைகள்	வெற்றிடம் நிலவும் மொழி மூலம் மற்றும் பாடத்திற்கான குறியீட்டு இலக்கம்		
		சிங்கள மொழி மூலம்	தமிழ் மொழி மூலம்	ஆங்கில மொழி மூலம்
பௌத்த சமயம்	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக பௌத்த சமயம் அல்லது பௌத்த நாகரிகத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**17S**		
புவியியல்	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**18S**	**18T**	**18E**
குடியுரிமைக் கல்வி	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக அரசியல் விஞ்ஞானத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**19S**	**19T**	
இசை (கீழைத்தேய)	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**20S**		
நடனம் (உள்நாட்டு)	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**21S**		
சித்திரம்	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**22S**		
நாடகம் மற்றும் அரங்கேற்றல் கலை	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**23S**		
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**24S**	**24T**	**24E**

அட்டவணை இலக்கம் I

வெற்றிடம் நிலவும் பாடம்	கல்வித் தகைமைகள்	வெற்றிடம் நிலவும் மொழி மூலம் மற்றும் பாடத்திற்கான குறியீட்டு இலக்கம்		
		சிங்கள மொழி மூலம்	தமிழ் மொழி மூலம்	ஆங்கிள மொழி மூலம்
விவசாயம் மற்றும் உணவுத் தொழிநுட்பம்	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**25S**		**25E**
தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**26S**		
விசேட கல்வி	கல்வியியல் இளமானிப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் பிரதான பாடம் / பாடங்களாக உரிய பாடத்தினைக் கற்று இருத்தல் மற்றும் கல்வியியல் இளமானிப் பட்டத்தில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருத்தல்.	**27S**		